**S.C. No.456/2016**
**P.W.1 திரு.ராமகிருஷ்ணன்**
**நாள் – 02.02.2026**

( 1, 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 7 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். அ.சா.1 மனுவின் பேரில் திரும்பவும் விசாரிக்கப்படுகிறார்.)

**<u>1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

பொட்டு சுரேஷ் கொலை வழக்கில் நான் ஒரு சாட்சி என்றால், சரியல்ல. பொட்டு சுரேஷ் கொலை வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. போலீஸார்மேற்படி பொட்டு சுரேஷ் கொலை வழக்கில் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும் மேற்படி வாக்குமூலம் இந்த வழக்கிற்கு எதிராக இருப்பதால் போலீஸார் என்னை அந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவர் என்னை விசாரிக்கும் போது அடையாளம் தெரியாத ஒரு நபர் தன்னை தாக்கியதாக கூறினேனா என்றால், நான் அந்த சமயத்தில் என்ன சொன்னேன் என்று எனக்கு ஞாபகமில்லை. போலீஸார் என்னை விசாரணை செய்யும் போது மருத்துவரிடம் அடையாளம் தெரியாத நபர் என்னை குத்தி காயப்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை.சம்பவத்தின் போது நான் ஓட்டியதாக சொல்லப்படும் கார் ஸ்விப்ட் காராகும். மேற்படி காரை பார்க் செய்த பின்பு காரை லாக் செய்துவிட்டுதான் முடிவெட்டும் கடைக்கு சென்றேன் என்றால், சரிதான். நான் முடிவெட்டிவிட்டு கடையை விட்டு வெளியே வரும் பொழுது ரிமோட் சாவி மூலம் காரை திறந்துவிட்டேன். அன்றைய தினம் காரை நானே ஓட்டி வந்தேன். நான் காரின் கதவை திறந்து திரும்பி காரின் உள்ளே ஏறும் போது என்னுடைய வயிற்றில் 1வது எதிரி கத்தியால் என்னை குத்த ஆரம்பித்துவிட்டார். என்னை குத்தியவுடன் இரத்தம் வந்தது. மேற்படி இரத்தம் காரின் முன் கதவு மற்றும் தரை பகுதிகளில்பட்டது. நான் முதல் குத்து பட்ட உடன் காரின் உள்ளே சென்று படுத்துவிட்டேனா என்றால், எத்தனை குத்து பட்ட பிறகு நான் காரின் உள்ளே

சென்று உடலின் பாதி பகுதி காரின் உள்ளேயும், கால் பகுதி வெளியில் இருக்குமாறும் படுத்தேன் என்று எனக்கு தெரியாது. நான் படுத்த பகுதி காரின் ஓட்டுநர் இருக்கையாகும். நான் மல்லாங்க படுத்திருந்தேன். நான் மல்லாங்க படுத்திருந்த போதும் எனக்கு கத்தி குத்துகள் விழுந்தது. நான் காரின் உள்ளே இருக்கும் போது விழுந்த கத்தி குத்துகள் உடலின் எந்த பகுதியில் விழுந்தது என்றால், என் இடது நெஞ்சு பகுதியிலும், இடது கை புஜத்திலும் விழுந்தது. அப்பொழுது காரின் சீட்டு மற்றும் மேற்கூரை பகுதி ஆகியவற்றில் இரத்தம் பட்டது. என்னை இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும் வரை காரின் உள்ளே படுத்துகிடந்தேனா அல்லது வெளியே வந்துவிட்டேனா என்றால், நான் வெளியே வந்து நின்று கொண்டிருந்தேன். நான் வெளியே வந்து நின்றிருந்த போது என்னுடைய உடையில் இரத்தம் பட்டது. தரையில் பட்டதா என்று எனக்கு தெரியாது. என்னை மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் எனக்கு நேரம் ஞாபகமில்லை. நான் இருசக்கர வாகனத்தில் ஓட்டிய நபரின் பின்னால் உட்கார்ந்து தான் மருத்துவமனைக்கு சென்றேன். நான் மருத்துவமனைக்கு செல்லும் போது இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றவரின் முதுகில் சாய்ந்து பிடித்துகொண்டு சென்றேன். அப்போது இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற நபர் மற்றும் இருசக்கர வாகனம் ஆகியவற்றில் இரத்தம் பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது காரின் சாவி என்னிடமிருந்ததா அல்லது கீழே விழுந்துவிட்டதா என்றால், என்னிடம் இல்லை. நான் முதலில் தேவதாஸ் மருத்துவமனைக்கு சென்றேன் பிறகு நான் அப்போலோ மருத்துவமனைக்கு சென்றேன். மேற்படி அப்போலோ மருத்துவமனையில் டிஸ்சார்ஜ் சம்மரி எதுவும் கொடுத்தார்களா என்றால், நான் சிகிச்சை முடிந்து டிஸ்சார்ஜ் ஆகும் போது டிஸ்சார் சம்மரி கொடுத்தார்கள். டிஸ்சார் சம்மரி கொடுத்த பிறகு போலீஸார் என்னை ஒருதடவை வந்து விசாரித்தார்கள். போலீஸார் என்னிடம் அந்த டிஸ்சார் சம்மரியை கேட்டு

வாங்கவில்லை, ஆனால் என் வீட்டில் உள்ள நபர்களிடம் கேட்டு வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும், நான் அரசியல் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் இந்த புகார் பொய்யாக கொடுக்கப்பட்டு அவர்கள் சொல்லி கொடுத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொட்டு சுரேஷ் வழக்கில் இருக்கின்ற அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் பிஸ்டல் உள்ளது அதற்குரிய உரிமமும் உள்ளது என்றால், பிஸ்டலுக்குரிய உரிமம் உள்ளது, அது Sports License ஆகும். மேற்படி பிஸ்டல் மற்றும் உரிமத்தை போலீஸார் பார்த்தார்களா என்றால் இல்லை. மேற்படி பொட்டு சுரேஷ் வழக்கில் என்னிடமிருந்த பிஸ்டல் சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு அரசியல் ரீதியாகவும் பல விரோதிகள் உண்டு என்றும் நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் சம்பவத்தில் ஈடுபட்டது யார் என்று தெரியாது என்றும் பின்னிட்டு அரசியல் விரோத்தின் காரணமாக வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. மேற்படி பிஸ்டல் உரிமம் எனக்கு 2009 அல்லது 2010ம் வருடமா என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த காலகட்டத்தில் தான் நான் மேற்படி துப்பாக்கி உரிமம்

பெற்றேன். மேற்படி துப்பாக்கி உரிமம் Sports License இல்லை என்று நான் தற்காப்பிற்காக அதிக எதிரிகள் இருந்ததால் வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை 2 மற்றும் 7 எதிரிகள் தழுவிக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.02 18:19:19 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.